©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 188] CHENNAI, TUESDAY, JUNE 28, 2011
Aani 13, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை.**

**புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் 2993/2008/அ3(ஊரா.)]*

**No. VI(2)/383(b-1)/2011.**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை ஊராட்சித் தலைவர் திருமதி அ. திரவியராாணி என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன், ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும், இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சித் தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி புதுக்கோட்டை ஊராட்சித் தலைவர் திருமதி அ. திரவியராாணி என்பவரை ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வாகவாசல் ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் 3146/2008/அ3(ஊரா.)]*

**No. VI(2)/383(b-2)/2011.**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வாகவாசல் ஊராட்சித் தலைவர் திரு. க. கண்ணதாசன் என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன், ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும், இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராகச் செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சித் தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205 உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி வாகவாசல் ஊராட்சித் தலைவர் திரு. க. கண்ணதாசன் என்பவரை ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**ப. மகேஸ்வரி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

புதுக்கோட்டை,
**2011 ஜூன் 27.**

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.